வதுமோ அல்லது அவர்கள் விரும்புகிற காலம் வரையிலுமோ அந்த இடத்தில் அவர்கள் குடியிருக்கலாம் என்று இந்த அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. திரு. ராஜாராம் நாயுடு, எம். எல். சி. அவர்களுக்கு 31—12—1968 வரையில் குடியிருக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

பொட்டப்பட்டிக்கு அண்மையில் அணைக்கட்டு

*90 வினு.—திரு. பெ. மலேச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், பொட்டப்பட்டிக்கு அண்மையில் அணை கட்டும் திட்டம் தீட்டப்பெற்றது உண்மையா ?

(இ) ஆம் எனில், இதுவரை அரசாங்கம் அவ்வணை கட்டும் திட்டத்தை நிறைவேற்றுததற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : (அ) இச் செயற்குறிப்பு குறித்து தொடக்க ஆய்வு நடத்தப்பட்டது.

(இ) கீழ்க்கண்ட காரணங்களால் இச்செயற்குறிப்பு குறித்து மேலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(1) ஆற்றின் கீழ் உள்ள 10,535 ஏக்கருக்குப் பாசனமளிக்க 210·7 கோடி கன அடி நீர் தேவையாயிருக்க, அடி நிலப்பகுதியில் சராசரி 124·8 கோடி கன அடி நீர் மட்டும் கிடைக்கிறது. தற்போதைய பாசனத்துக்குக்கூட நீர் பற்றுக்குறையாக இருப்பதால், புதிய பரப்பளவிற்குப் பாசன வசதியளிப்பதென்பது இயலாத செயலாகும். (2) மதுரையிலிருந்து திருச்சிராப்பள்ளி செல்லும் சாலே 3 பர்லாங்குத் தொலேவிற்குப் பாதிக்கப்படும். எனவே, அச்சாலேயை வேறு திசையில் திருப்பிவிட வேண்டும். (3) விலே மதிப்புள்ள 868 ஏக்கர் தென்னே, மா, புளியந்தோப்புகள் நீரில் மூழ்கிவிடும். அவற்றைக் கையகப்படுத்த வேண்டும். (4) லக்கரைப்பட்டி என்ற ஒரு சிற்றூரும், அடுத்துள்ள பல ஏரிகளும் நீர்த்தேக்கத்தால் மூழ்கடிக்கப்பட்டு விடும். (5) கீழ்ப்பகுதி குடியானவர்களும் இச் செயற்குறிப்புக்கு மறுப்பு தெரிவிக்கிறுர்கள்.

திரு. பெ. மலேச்சாமி : தலேவர் அவர்களே, இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு 1961-இல் ஆய்வு செய்யப்பட்டது. அமைச்சர் அவர்கள் பல காரணங்களேத் தந்தார்கள். என்ருலும் இந்தத் திட்டத்திஞல் மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களின் சில பகுதிகள் நன்மை பெறும் என்று கருதுவதால், மீண்டும் மறு பரிசீலனே செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : தலேவர் அவர்களே, கனம் உறுப்பினருடைய கேள்விக்கு ஆதரவாக, தொடக்க ஆய்வு என்றுதான் தரப்பட்டிருக்கிறது. மீண்டும் ஆய்வு நடத்த வசதி இருக்கிறது. ஆகவே, இதுபற்றி மீண்டும் புனராலோசனே செய்யப்படும்.

Nagapattinam-Tuticorin Express Buses

* 91 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the express buses are run between Nagapattinam and Tuticorin by the Government State Transport Department ;

(*b*) if so, from what date ; and

(*c*) the fare charged and how it compares with those charged by private operators ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : (அ) ஆம்.

(இ) 10—8—1967 முதற்கொண்டு.

(உ) ஒரு கல் தொலைவிற்கு 5 காசு வீதம் கட்டணம் விதித்து வசூலிக்கப்படுகிறது. இந்த வழித்தடத்தின் முழுப் பயணக் கட்டணம் ரூ. 12·10. இந்த வழித்தடம் முழுவதிலும் தனியார் பேருந்து எதும் ஓட்டப்படுவதில்லை. எனவே, இருவகைப் பேருந்துகளுக்கும் கட்டண விவரம் ஒப்பிட்டுக் கூறுவதற்கு இடமில்லை.

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, இந்த வழித்தடத்தில் தனியார் துறையில் விரைவுப் பேருந்து ஓட்டுவதில்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியில்லையென்றாலும்கூட, மத்தியிலே நின்று, மாறி மாறிப் போகின்ற பஸ்களின் கட்டணங்களை ஒன்றாகச் சேர்த்துப் பார்த்தாலும் நம்முடைய கட்டணம் அதிகமாக இருக்கிறது அல்லவா ? அதைக் குறைக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிச் சேர்த்துப் பார்த்தாலும் நம்முடைய கட்டணம் குறைவுதான் . தனியார் துறையினர் ஒரு கிலோவுக்கு 3 காசு வசூலிக்கிறார்கள். நம்முடைய விரைவுப் பேருந்து வண்டிகளில் ஒரு கல் தொலைவிற்கு 5 காசு வசூலிக்கப்படுகிறது. எனவே, இரண்டும் சமமாகத்தான் இருக்கும்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, தற்போது நாகப்பட்டினத்திலிருந்து புறப்படும் பஸ் நாகூரிலிருந்து புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து உத்திரவிடுமா ? நாகூரும் முனிசிபல் பகுதியைச் சேர்ந்ததுதான்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நாகப்பட்டினத்திலுள்ளவர்கள் இந்த யோசனைக்கு மறுப்பு அளிக்க மாட்டார்கள் என்று கனம் உறுப்பினர் அவர்கள் உறுதியளிப்பார்களானால் அதுபற்றி கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நாகப்பட்டினத்திற்கும் தூத்துக்குடிக்கும் இடையில் ஓடும் பஸ்ஸைப்பற்றியது இந்த வினா. உறுப்பினர்கள் அதையொட்டி கேள்விகள் கேட்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்திற்கும் தூத்துக்குடிக்கும் இடையில் ஓடும் எக்ஸ்பிரஸ் பஸ்களை அதிராம் பட்டினம் வழியாக விட வேண்டுமென்று பொதுமக்கள் விண்ணப்பங்கள் அனுப்பியிருக்கிறார்களே, அதுபற்றி அரசாங்கத்தின் முடிவு என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தற்போது அந்த எக்ஸ்பிரஸ் பஸ்கள் ஓடும் தூரம் 242 மைல்களாக இருக்கின்றன. இன்னும் அதிகமாகச் சுற்றிக்கொண்டு போக வேண்டுமென்று சொன்னால், "விரைவு வண்டி" என்ற பெயரையே அது இழந்துவிடக்கூடும்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, தூத்துக்குடிக்கும் வேலூருக்கும் ஏதாவது பஸ் விட வேண்டுமென்ற உத்தேசம் உண்டா ? விரைவு வண்டிகளில் பஸ் புறப்படும் நேரம் வரை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று தனி இடம் ஒதுக்கப்பட வேண்டுமென்று அரசு உத்திரவிட்டிருக்கிறதா ? தற்போது வேலூரிலிருந்து மதுரைக்குச் செல்லும் பஸ்ஸை தூத்துக்குடி வரையில் விஸ்தரிக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தற்போது அதுபற்றிய திட்டம் ஒன்றும் இல்லை.